சார்பு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை
முன்னிலை: திரு.ஏ.தமிழ்செல்வன், எம்.எல்.,
சார்பு நீதிபதி, தேன்கனிக்கோட்டை
2022–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ஆம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.3/2021 in அ.வ.எண்.641/2021**

1. லட்சுமி
2. முருகன்
3. குப்பன்
4. முருகேசன்
5. முருகம்மாள்

... மனுதாரார்கள்/வாதிகள்

/எதிராக/

1. பார்வதி
2. காவேரி
3. சங்கர்
4. நாகராஜ்
5. மணி
6. அர்ஜினன்

... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள்.

இந்த மனுவானது இறுதி விசாரணைக்காக 02.09.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். வெங்கடேஷ்குமார்அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.ராமபிரகாஷ் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

**ஆணையுரை**

இம்மனு உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39, விதி 1–இன் கீழ் அசல் வழக்கு முடியும் வரை மனு சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளின் நிம்மதியான சுவாதீனத்தினை எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள் எந்தவொரு இடைஞ்சலும் செய்யாமல் இருக்கவும், எதிர்மனுதாரர்கள்/1 முதல் 6 பிரதிவாதிகள் மனு சொத்தில் எந்தவொரு வில்லங்கம் செய்யாமல் இருக்கவும் ஓர் இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**2. மனுவின் சுருக்கம் பின்வருமாறு:**

மனுவில் 3–ம் மனுதாரர்/3–ம் வாதி ஆவார். 1–ம் மனுதாரர்/1–ம் வாதி மனுதாரரின் தாய் ஆவார். 2, 4–ம் மனுதாரர்கள்/2,4–ம் வாதிகள் 3–ம் மனுதாரரின் சகோதரர்கள் ஆவார்கள். 5–ம் மனுதாரர்/5–ம் வாதி 3–ம் மனுதாரரின் சகோதரி ஆவார். அவர்களின் சார்பாகவும் இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு முடியும் வரை மனு சொத்தில் மனுதாரர்களின் நிம்மதியான சுவாதீன அனுபவத்தையும், மனு சொத்தில் எந்தவொரு வில்லங்க பராதீனமும் செய்யாமல் இருக்கவும் ஓர் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்துள்ளார். 1–ம் மனுதாரர்/1–ம் வாதி இறந்த பெருமாள் என்பவரின் முதல் மனைவி ஆவார். 2–ம் மனுதாரர்/2–ம் வாதி மற்றும் 3–ம் மனுதாரர் இறந்த பெருமாள் என்பவருக்கும், 1–ம் மனுதாரர்/1–ம் வாதிக்கும் பிறந்த வாரிசுதாரர்கள் ஆவார்கள். 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/ 4 மற்றும் 5 வாதிகள் இறந்த பெருமாள் என்பவருக்கும் இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்ட முனியம்மாள் என்பவருக்கும் பிறந்த வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி பெருமாள் என்பவருக்கும் இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்ட முனியம்மாள் அவர்களுக்கும் பிறந்த வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி பெருமாள் என்பவர் கடந்த 11.06.2013 அன்று இறந்து விட்டார். இறந்த பெருமாள் என்பவருக்கு சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி இறந்த சின்னராஜ் என்பவரின் முதல் மனைவி ஆவார். 3 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள்/3, 4–ம் பிரதிவாதிகள் இறந்த சின்னராஜ் என்பவருக்கும், 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதிக்கும் பிறந்த வாரிசுதாரர்கள் ஆவார்கள். 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி இறந்த சின்னராஜ் அவர்களின் இரண்டாவது மனைவி ஆவார். 5 மற்றும் 6 எதிர்மனுதாரர்கள்/5,6–ம் பிரதிவாதிகள் இறந்த சின்னராஜ் என்பவருக்கும் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதி அவர்களுக்கும் பிறந்த வாரிசுதாரர்கள் ஆவார்கள். மேற்படி சின்னராஜ் என்பவர் கடந்த 17.01.2016 அன்று இறந்து விட்டார். மேற்படி பிரதிவாதிகள் இறந்துவிட்ட சின்னராஜ் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். இறந்த சின்னராஜ் என்பவரும், இறந்த

பெருமாள் என்பவரும் சந்தே கவுண்டர் என்பவரின் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மனு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் சந்தேகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். சந்தேகவுண்டர் சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்து அவரது பெயரில் வருவாய் ஆவணங்கள் இருந்து வந்தது. சந்தேகவுண்டர் சுமார் 40 வருடங்களுக்கு முன்பே இறந்து விட்டார். அதன் பின்னிட்டு மனு சொத்துக்களும் மற்றும் பிற சொத்துக்களுக்கும் இறந்த சின்னராஜ் மற்றும் பெருமாள் பெயரில் பட்டா எண். 695, 311 ஆகியவை கூட்டாக இருந்து வந்துள்ளது. மேலும் இருவரும் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்தனர். மேலும் மனு சொத்து தவிர்த்து இன்னும் சில சொத்துக்களில் இறந்த பெருமாள் அவர்களுக்கு தெரியாமல் சின்னராஜ் அவர்கள் செங்கோடசின்னஅள்ளி கிராம எண். 95/1A, 0.94 ஏக்கர் உள்ள சொத்தை கடந்த 28.04.1994 அன்று சொன்னேநாயக்கன ஹாள்ளி கிராமத்தில் வசிக்கும் அரிச்சந்திரன் என்பவருக்கு விற்பனை செய்து இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.666/1994–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி மனு சொத்து தவிர்த்து மற்றும் இதர சொத்துக்களில் இறந்த பெருமாள் அவர்களுக்கு தெரியாமல் சின்னராஜ் மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்/2–ம் பிரதிவாதியும் சேர்ந்து செங்கோடசின்ன அள்ளி கிராம சர்வே எண். 95/1B 0.90 ஏக்கர் உள்ள சொத்தை கடந்த 28.06.1996 அன்று செங்கோடசின்னஅள்ளி கிராமத்தில் வசிக்கும் லட்சுமணன் மனைவி பெருமாள் என்பவருக்கு விற்பனை செய்து இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 201/1996– ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவரங்களை இறந்துவிட்ட பெருமாள் அவர்கள் சின்னராஜ்யிடம் கேட்டதற்கு விற்ற சொத்துக்கள் அனைத்தும் பாகம் பிரிக்கும்போது, மனுதாரர் அவரது பங்காக மேற்படி விற்பனை செய்த சொத்துக்களை ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளார். ஆனால் சிறிது காலத்திற்கு பிறகு மேற்படி இருவருக்கும் இடையே பாகபிரிவினை பிரிக்கும்போது முன்னால் விற்பனை செய்த சொத்துக்களை ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும் சொத்துக்களில் சரி சமமான பாகம் வேண்டும் என்று மேற்படி இறந்துவிட்ட சின்னராஜ் என்பவர் இறந்துவிட்ட பெருமாள் அவர்களிடம் பிரச்சனை செய்ததால் பெருமாள் என்பவர் கடந்த 1996–ம் வருடம் ஓசூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தும் மற்றும் இதர சொத்துக்கள் 2–ம் எதிர்மனுதாரர்/2–ம்

பிரதிவாதி மற்றும் இறந்த சின்னராஜ் விற்பனை செய்த சொத்துக்கள் அனைத்தும் சேர்த்து உரிமையியல் வழக்கு தொடர்ந்தார். மேற்படி அசல் வழக்கு எண். 232/1996 ஆகும். மேற்படி வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது தேன்கனிக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி தேன்கனிக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 178/2009 ஆகும். மேற்படி வழக்கு விசாரணைக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராக காரணத்தால் கடந்த 30.09.2011 அன்று அனைத்து சொத்துக்களிலும் இறந்துவிட்ட பெருமாள் என்பவருக்கு சரிசமமான பாக பாத்தியம் உள்ளது என்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் இறந்துவிட்ட சின்னராஜ் மற்றும் பெருமாள் அவர்களின் கூட்டுபட்டா அசல் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதியின் தந்தை ஓசூர் சார்பதிவாளர் ஆட்சியரிடம் சொத்துக்களின் வருவாய் ஆவணங்களை பொறுத்து மனு ஒன்று கொடுத்துள்ளார். அதன் பெயரில் விசாரணை நடைபெற்ற சமயத்தில் இறந்த சின்னராஜ் மற்றும் பிரதிவாதிகள் மீண்டும் சமரசத்திற்கு ஊர் பஞ்சாயத்து பேசப்பட்டது. அதில் செங்கோடசின்னஅள்ளி கிராம சர்வே எண். 95/1A, 95/1B, 219/2A, 219/2B ஆகிய சொத்துக்ள் இறந்த சின்னராஜிக்கும், மேற்படி கிராம சர்வே எண். 188/2, 219/5A ஆகிய சொத்துக்கள் இறந்த பெருமாள் அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. மேற்படி இறந்துவிட்ட சின்னராஜ் 188/2–ல் உள்ள சொத்தில் 3–ம் பிரதிவாதிக்கு 18 சென்ட் சொத்தை கடந்த 16.03.2000–ம் வருடத்தில் இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 245/2000–ல் உரிமை மாற்றம் செய்திருந்ததை இரத்து செய்து கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் வருவாய் ஆவணங்களின் மனு சொத்தின் பெயர் மாற்றம் செய்து கொடுத்துவிடுவது என முடிவு செய்யப்பட்டது. அன்று முதல் இன்று வரை மனு சொத்தில் இறந்த விட்ட பெருமாள் மற்றும் அவரது வாரிசுகளான மனுதாரர்களும் சுவாதீனத்தில் இருந்து வருகின்றார்கள். அதேபோல் இறந்துவிட்ட பெருமாள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் பஞ்சாயத்தில் முடிவு செய்யப்பட்ட பாக பாத்தியத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தால் மேற்படி தேன்கனிக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் பெறப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணை படி இறுதிநிலை தீர்ப்பாணை வேண்டி வழக்கு தாக்கல் செய்யவில்லை. அதேபோல் இறந்துவிட்ட

சின்னராஜ் மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீடுகள் எதுவும் செய்யவில்லை. மேலும் இறந்த பெருமாள் தனக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண். 219/5A–ல் 7 சென்ட் நிலத்தினை கிராம குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசிற்கு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு தானமாக கொடுத்து அதை கடந்த 30.11.2010–ல் இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 3084/2010 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 15/5A–ல் மீதம் இருந்த 33 சென்ட் நிலத்தினை கடந்த 30.03.2012 அன்று ஒரு குப்புசாமி என்பவருக்கு குடும்ப கடன் தீர்க்கும் பொருட்டு விற்பனை ஆவணம் ஏற்படுத்தப்பட்டு கடந்த 30.03.2012–ல் இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 805/2012 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விற்பனை சமயத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. எனவே 1 முதல் 6 பிரதிவாதிகள் மனு எந்தவொரு வில்லங்கமும் செய்யாமல் இருக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும் இல்லையேல் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்களின் எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

இம்மனு சட்டம் மற்றும் சங்கதிகளின் அடிப்படையில் நிலைக்கத்தக்கதல்ல. 1–ம் வாதியின் கணவரும் மற்ற வாதிகளின் தந்தையுமான பெருமாள் தாக்கல் செய்திருந்த அ.வ.எ.ண்.179/2009–ல் வழங்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின்படி இறுதிநிலை தீர்ப்பாணை பெற முயற்சி மேற்கொள்ளாமல் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளது முற்றிலும் சட்ட விரோதமானது என்றும், அந்த அசல் வழக்கில், சூடன் என்பவரின் வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்திருந்ததும், அதனை காட்டாமல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றதால் அந்த தீர்ப்பாணையும் செல்லத்தக்கதல்ல என்றும், உண்மையில் தாவா சொத்துக்கள் மற்றும் சில சொத்துக்கள் ஒரு சூடன் என்பவருக்கு பிதுராஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும் என்றும், 1984–க்கு முன்பே 1965–ல் அவரது குழந்தைகள் பாகம் செய்து கொண்டார்கள். தாவா சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் சின்னராஜ் என்பவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. அந்த வாய்மொழி

பாக தேதியிலிருந்து சின்னராஜ் மற்றும் அவரது வாரிசுகளும் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். சின்னராஜ் சொத்து வரி கட்டி வந்ததால் வருவாய் ஆவணங்கள் அவர் பெயரில் இருந்தது. அதன்படி பட்டா எண்.821 அவர் பெயருக்கு எழுதப்பட்டது. 1984–லிலிருந்து அடங்கல் சின்னராஜ் பெயரில் உள்ளது. பெருமாள் 1965–ல் அதாவது 25.10.1965–ல் பிதுராஜித சொத்தை அவரது தந்தைக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார். அந்த விடுதலை பத்திரத்தில் பட்டா எண்.121–க்கு உட்பட்ட சர்வே எண் 95/1–ல் 1 ஏக்கர் பெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது. ஆகையால் பெருமாளுக்கோ அவரது வாரிகளுக்கோ சொத்தில் எந்தவித பாத்தியதையும் இல்லை. எனவே எதிர்மனுதாரர்கள் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கோருகின்றனர்.

4. மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் 7 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில்:**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதயாகும்.

**தீர்வு:**

6. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர்கள்/வாதிகள் தாவா சொத்தில் அவர்களுக்குள்ள உரிமைமூலத்தை விளம்புகை செய்யவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். இந்த இடைக்கால மனுவினை வழக்கு முடியும்வரை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யாதவாறும், வேறு மூன்றாம் நபர்களுக்கு பராதீனம் செய்துவிடாமல் இருக்கவும் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் ஆதியில் சந்தேகவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். அவர் 40 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். அதன் பின்னிட்டு மனு சொத்துக்களும், பிற சொத்துக்களும் அவரது வாரிசுகளான பெருமாள் மற்றும் சின்னராஜ் ஆகியோர்களுக்கு பட்டா எண். 695, 311 ஆகியவைகளில் கூட்டாக இருந்து வந்த நிலையில், சின்னராஜ் சில சொத்துக்களை

விற்றுவிட்டார். அதனால் பெருமாள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தார். அதன்படி தேன்கனிக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 178/2009 என்ற வழக்கில் 30.09.2011 அன்று பெருமாளுக்கு சமபாகம் உள்ளது என ஒருதலைபட்ச முதலநிலை தீர்ப்பாணை வழங்கியது. அதன் பிறகு சமரசம் ஏற்பட்டு செங்கோடசின்னஅள்ளி கிராம சர்வே எண்கள். 95/1A. 95/1B, 219/2A, 219/2B ஆகிய சொத்துக்கள் சின்னராஜ்க்கும், அதே கிராம சர்வே எண்கள் .188/2, 219/5A ஆகிய சொத்துக்கள் பெருமாளுக்கும் ஒதுக்கப்பட்டது. சின்னராஜ் சர்வே எண். 188/2–ல் 3–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த 18 சென்ட் சொத்து கிரைய ஆவண எண். 245/2000–ஐ ரத்து செய்து கொடுப்பது என்றும் முடிவு ஆனது. அன்று முதல் பெருமாள் என்பவருக்கும் அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளும் சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், 3–ம் பிரதிவாதி பெயரில் உள்ள ஆவணத்தை ரத்து செய்து கொடுக்கவில்லை என்றும், சின்னராஜ் 17.01.2016–இல் இறந்துவிட்டார் என்றும், இந்த சூழ்நிலையில் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நுழையாமல் இருக்கவும், வில்லங்கம் செய்யாமல் இருக்கவும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என வாதியின் வழக்கறிஞர் வாதிட்டார்.

8. மாறாக 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையாகி வழக்கறிஞர், 1–ம் வாதியின் கணவரும் மற்ற வாதிகளின் தந்தையுமான பெருமாள் தாக்கல் செய்திருந்த அ.வ.எ.ண்.178/2009–ல் வழங்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின்படி இறுதிநிலை தீர்ப்பாணை பெற முயற்சி மேற்கொள்ளாமல் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளது முற்றிலும் சட்ட விரோதமானது என்றும், அந்த அசல் வழக்கில், சூடன் என்பவரின் வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்திருந்ததும், அதனை காட்டாமல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றதால் அந்த தீர்ப்பாணையும் செல்லத்தக்கதல்ல என்றும், உண்மையில் தாவா சொத்துக்கள் மற்றும் சில சொத்துக்கள் ஒரு சூடன் என்பவருக்கு பிதுராஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும் என்றும், 1984–க்கு முன்பே 1965–ல் அவரது குழந்தைகள் பாகம் செய்து கொண்டார்கள். தாவா சொத்துக்களும் மற்றும் இதர சொத்துக்களும் சின்னராஜ் என்பவர் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. அந்த வாய்மொழி பாக தேதியிலிருந்து சின்னராஜ்ம் மற்றும் அவரது வாரிசுகளும் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள். சின்னராஜ் சொத்து வரி கட்டி வந்ததால் வருவாய் ஆவணங்கள் அவர்

பெயரில் இருந்தது. அதன்படி பட்டா எண்.821 அவர் பெயருக்கு வழங்கப்பட்டது. 1984–லிலிருந்து அடங்கல் சின்னராஜ் பெயரில் உள்ளது. பெருமாள் 1965–ல் அதாவது 25.10.1965–ல் பிதுராஜித சொத்தை அவரது தந்தைக்கு விடுதலை செய்து கொடுத்துவிட்டார். அந்த விடுதலை பத்திரத்தில் பட்டா எண்.121–க்கு உட்பட்ட சர்வே எண் 95/1–ல் 1 ஏக்கர் பெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது என தெளிவாக தெரியவரும். ஆகையால் பெருமாளுக்கோ அவரது வாரிகளுக்கோ சொத்தில் எந்தவித பாத்தியதையும் இல்லை. அந்த விடுதலை பத்திரம் எ.ம.சா.ஆ1, பட்டா எண்.821–க்கு சின்னராஜ் பெயரில் உள்ள கிஸ்ட் ரசீதுகள் எ.ம.சா.ஆ.2, சின்னராஜ் பெயரில் உள்ள பட்டா எண்.821 எ.ம.த.சா.ஆ.3, சின்னராஜ் பெயரில் உள்ள UDR பட்டா எண். 821 எ.ம.சா.ஆ.4, UDR பட்டா எண். 225 எ.ம.சா.ஆ.5, பட்டா எண்.38 எ.ம.சா.ஆ.6, சின்னராஜ் பெயரில் உள்ள 'அ' பதிவேடு எ.ம.சா.ஆ.7 ஆகியவைகள் மேற்கோள் காட்டி வாதிட்டார்.

9. தரப்பினர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களையும், தரப்பினர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் நம்பியிருக்கும் ஆவணங்களையும் நான் ஆய்வு செய்தேன்.

10. மனுதாரர் தரப்பில், தாவா சொத்தில் செங்கோடஅள்ளி சர்வே எண். 188/2–ல் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதாக கூறினாலும், அதற்கான ஆவணங்கள் எதுவும் முன்னிடப்படவில்லை. மாறாக 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் சின்னராஜ் பெயரில் உள்ள பட்டா எண்.821, சர்வே எண். 188/2 சின்னராஜ் பெயரில் உள்ளது. இருப்பினும் தாவா தாக்கல் செய்த நாளில் தாவா சொத்தில் யார் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வந்தார்கள் என காட்டுவதற்கு ஆவணம் இல்லை. மாண்புமிகு உச்சநீதிமன்றம் ஸ்ரீமதி.சந்திர குமாரி வழக்கில், வழக்கு தாக்கல் செய்த தேதியில் உரிமை மூலம் இருந்தாலும், உடைமையில் இல்லையென்றால் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற தகுதியில்லை என வழங்கியுள்ள வழிகாட்டுதல்களை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எனவே வழக்கு தாக்கல் செய்த தேதியில் மனுதாரர் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் உடைமையில் இருந்தார் என ஆவணங்கள் மூலம் காட்டபடாததால் எதிர்மனுதாரர்களின் முன் பாத்தியதையர் சின்னராஜ் என்பவர் பெயரில் பட்டா எண். 821 இருந்தாலும் பிரதான வழக்கின்

நடவடிக்கையில் இரு தரப்பினரின் சட்டபூர்வ உரிமைகளை தீர்மானிக்காமல் மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற தகுதியுடையவர்கள் அல்ல என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

11. மேலே கண்ட முடிவின் காரணங்களால் மனுதாரர் கோரியபடி இடைக்கால உறுத்துக்கட்டளை பெற தகுதியானவர்கள் அல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்து தீர்வு காண்கிறது. அவ்வாறே மேற்காண் பிரச்சனை தீர்மானிக்கப்படுகிறது.

12. முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2022-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A TAMILSELVAN
SUBORDINATE JUDGE, DENKANIKOTTAI
Digitally signed by A TAMILSELVAN
Location: KRISHNAGIRI DISTRICT
Date: 2022.10.17 08:15:43 +0000

**இணைப்பு:**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்: இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.10.1965 | விடுதலை பத்திரம் |
| எ.ம.சா.ஆ.2 | | பட்டா எண்.821-க்கு சின்னராஜ் பெயரில் உள்ள கிஸ்ட் ரசீதுகள் (எண்ணிக்கை 8) |
| எ.ம.சா.ஆ.3 | | யு.டி.ஆர். பட்டா எண். 821 |
| எ.ம.சா.ஆ.4 | | யு.டி.ஆர்.பட்டா எண்.821 |
| எ.ம.சா.ஆ.5 | | யு.டி.ஆர். பட்டா எண்.225 |
| எ.ம.சா.ஆ.6 | | பட்டா எண். 38 |
| எ.ம.சா.ஆ.7 | -- | சின்னராஜ் பெயரில் உள்ள 'அ' பதிவேடு |

A TAMILSELVAN
SUBORDINATE JUDGE, DENKANIKOTTAI
Digitally signed by A TAMILSELVAN
Location: KRISHNAGIRI DISTRICT
Date: 2022.10.17 08:15:56 +0000